**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2024**
**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. "புல் நுனி மேல் நீர் போல்"–இவ் வுவமை எதனை வெளிப்படுத்துகிறது?
2. கல்வியை எப்பொழுது கற்கவேண்டும்?
3. தூக்கணாங்குருவியிடம் கற்றுக்கொள்ள வேண்டியது யாது?
4. அளவுக்கு மேல் உண்பவருக்கு என்ன நேரும்?
5. சதகங்கள் நீதிச்சதகங்கள் என அழைக்கப்படக் காரணம் என்ன?
6. பாரதியார் ஆத்திச்சூடியை எவ்வாறு தொடங்கியுள்ளார்?
7. முனைமுகத்து நில்லேல் – உணர்த்துவது யாது?
8. கல்விக்கு அழகு –ஔவையாரின் வரையறை என்ன?
9. கூடல்நகர் எது? அப்பெயர் பெற அழகர் கிள்ளளை விடுதூது கூறும் காரணம் என்ன?
10. இசையுடன் பாடுவதிலும் கூத்து ஆடுவதிலும் வல்லவரை நந்திக்கலம்பகம் எவ்வாறு குறிப்பிட்டுள்ளது?
11. திருமங்கையாழ்வார் பாடிய மடல் இலக்கியங்களைக் குறிப்பிடுக.

12. கோவை இலக்கியம்–பெயர்க்காரணத்தை வரையறுக்க.

13. தக்கயாகப் பரணியை இயற்றியவர் யார்?

14. 'குழவி மருங்கினும் கிழவது ஆகும்'–எதற்குரிய இலக்கணம்?

15. தண்டலையார் சதகத்தில் 'மீளா நரகத்தில் மூழ்குவார்' எனக் குறிப்பிடப்படுவோர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. இளமை நிலையாமை குறித்து நாலடியார் கூறுவன யாவை?
2. பாரதிதாசனின் புதிய ஆத்திச்சூடி – குறிப்பு வரைக.
3. கோடிபெறும் பாடலில் ஔவையார் வெளிப்படுத்தும் நான்கு அறநெறிகளை இயம்புக.
4. உழவின் மேன்மையை நல்வழி வழி விளம்புக.
5. விதியை வெல்லும் வழிமுறைகளாக குமரகுருபரர் கூறுவன யாவை?
6. நந்திக்கலம்பகத்தில் மேகத்தைத் தூதாக விடுத்துத் தலைவன் கூறுவன யாவை?
7. கலிங்கத்துப்பரணி காட்டும் பாலை நிலத்தின் இயல்பைச் சுட்டுக.
8. இராசராசன் உலாவில் மன்னனின் உலாச்சிறப்பினை விளம்புக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) ஆசாரக்கோவையில் வெளிப்படும் வாழ்வியல் நெறிகளை மதிப்பிட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) சமூக மேம்பாட்டுக்குப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் துணை நிற்பதை நிறுவுக.

2. (அ) நீதிநெறி விளக்கம் கல்வி குறித்து கூறுவனவற்றை ஆராய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) குற்றாலக் குறவஞ்சியில் குறத்தி மலைவளம் கூறுதல், குறி கூறுதல் ஆகியவற்றை விளக்குக.

3. (அ) "முக்கூடற்பள்ளு காட்டும் உழவர்களும் உழவுத்தொழிலும்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியங்களின் தனிச்சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

***